1974 சனவரி 24]

Passes for entry into General Hospital

* 126 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the police administration were permitted to locate persons without valid passes in the General Hospital in Madras about the 6th March 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் திங்கள் அளவில், சென்னையில் உள்ள பொது மருத்துவ மனையில் எல்லா வார்டுகளிலிருந்தும் மருத்துவ அதிகாரிகளின் அறைகளிலிருந்தும் டிபன் கேரியர்கள், டிரான்சிஸ்டர்கள், மற்றும் பிற சில்லறைப் பொருட்கள் ஆகியவை களவு போய்விட்டதாகத் தகவல்கள் கிடைத்தன. தகுந்த விசாரணை மேற்கொள்வதற்காக மருத்துவ மனை நிர்வாகம் இந்தத் தகவல்களைப் பொது மருத்துவ மனையிலுள்ள புறக்காவல் நிலையத்திற்கு அனுப்பியது. காவலர்கள் சரியான நுழைவுச் சீட்டுகள் இல்லாதவர்களைக் கண்டுபிடித்து, 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ஆம் நாளிலிருந்து பத்து வழக்குகளைப் பதிவு செய்துள்ளது.

THIRU N. DENNIS : The time allowed to see patients is limited. The patients also use to have some guests there. Therefore may I know whether Government will give up such methods?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நல்லவர்கள் பலர் நோயாளிகளைப் பார்க்க வருகிறார்கள். அதே நேரத்தில் அதை சாக்காக வைத்துக்கொண்டு திருடக் கூடிய மனப்பான்மையுள்ள சிலரும் உள்ளே நுழைந்துவிடுகிறார்கள். அதன் காரணமாக நோயாளிகளின் பொருள்களும், டாக்டர்களின் பொருள்களும் பறிபோய் விடுகின்றன. இதைத் தடுக்கவேண்டுமென்றால் காவல் துறையினரைக் கொண்டுதான் எதாவது செய்ய முடியும். காவல்துறையினர் சந்தேகத்திற்குரியவர்களையும் கைது செய்கிறார்கள். நல்லவர்களையும், சந்தேகம் இல்லாதவர்களையும் அந்த நேரத்தில் சேர்த்து கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்படும். பொது நன்மைக்காக சில்லரைத் தொல்லைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.